| | | |
|---|---|---|
| | **யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி** | |
| | **முதலாம் தவணைப்பரீட்சை - 2018** | |
| தரம் - 10 | நாடகமும் அரங்கியலும் | நேரம் : 3.00 மணித்தியாலம் |

## பகுதி I

❖ சரியான விடையின் கீழ் கோடிடுக.

01. ஆற்றுகைகலைகளில் ஒன்று?
    1) சித்திரம் 2) சிற்பம் 3) நடனம் 4) கட்டிடம்

02. அரங்கில் பிரதான மூலகம் எது?
    1) நடிகன் 2) ஆடையமைப்பு 3) காட்சி 4) பாடல்

03. அரங்கில் நான்காவது சுவராக இருப்பவர்கள்?
    1) இசையமைப்பாளர் 2) நடிகர்கள்
    3) பார்வையாளர் 4) நாடக ஆசிரியர்

04. எழுத்துரு உருவாக்கத்துக்கு உரியவர்?
    1) பாடகர் 2) நடிகன்
    3) இசையமைப்பாளர் 4) நாடக ஆசிரியர்கள்

05. பகுதி பகுதியாக ஒளிபரப்பப்படும் நாடகம்
    1) குறியீட்டு நாடகம் 2) இசைநாடகம்
    3) தொலைக்காட்சி நாடகம் 4) புத்தாக்க நாடகம்

06. முன் ஆயத்தம் இன்றி நடித்தல்?
    1) ஊமம் 2) புதிதளித்தல் 3) கூத்து 4) இசை நாடகம்

07. நாடகத்துக்கான முழுப்பொறுப்பையும் கொண்டவர்?
    1) தயாரிப்பாளர் 2) நெறியாளர் 3) பார்வையாளர் 4) நடிகர்

08. சிறுவர்களுக்காக தயாரிக்கப்படும் நாடகம்?
    1) சின்ன நாடகம் 2) இசை நாடகம் 3) நடன நாடகம் 4) சிறுவர் நாடகம்

09. வில்லிசைப்பாட்டு ஒரு
    1) ஆக்கும் கலை 2) செவிப்புலகலை 3) ஆற்றுகைக்கலை 4) கட்புலகலை

10. கையில் சிறிய துணியை வைத்து ஆடும் ஆட்டம்

1) கரகம் 2) காவடி 3) கும்மி 4) குயிலாட்டம்

11. நடிகன் தெளிவாக பேசுவதற்காக வழங்கப்படும் பயிற்சி

1) கராத்தே 2) உணவு உண்ணும் பயிற்சி
3) குரல் பயிற்சி 4) யோகப்பயிற்சி

12. “ஆரொடு நோகேன்” நாடகத்தின் ஆசிரியர்

1) கலைகுபிள்ளை 2) கந்தசாமி
3) குழந்தை மா.சண்முகலிங்கம் 4) பாலேந்திரா

13. “ஆடும் வீடும்” அரங்க விளையாட்டில் இருக்க வேண்டிய குறைந்த பட்ச நடிகர்கள்

1) 3 2) 8 3) 7 4) 9

14. அம்மனை குளிர்விப்பதற்காகவும் ஊர் நன்மைக்காகவும் செய்யப்படும் சடங்கு

1) காவடி 2) பிரதட்டை 3) குழுத்தி 4) தேங்காய் உடைத்தல்

15. அதிகாலையில் இசைக்கப்படும் இராகம்

1) கிந்தோளம் 2) மௌனம் 3) சிவரஞ்சினி 4) பூபாளம்

16. சிந்து நடைக் கூத்துக்கு பிரதானமாக இசைக்கப்படும் இசைக்கருவி

1) மிருதங்கம் 2) தவில் 3) கைத்தாளம் 4) உடுக்கு

17. களத்து மேட்டில் நிகழ்தப்படும் சடங்கு?

1) வாசாப்பு 2) வடமோடி 3) சொக்கரி 4) வசந்தன்

18. மட்டக்களப்பில் ஆடப்பட்டுவரும் கூத்து?

1) பறைமேளக்கூத்து 2) காமண்கூத்து 3) பொன்னர் சங்கர் 4) வசாப்பு

19. படச்சட்ட மேடையின் பிறப்பிடம்

1) அமெரிக்கா 2) இந்தியா 3) லண்டன் 4) இத்தாலி

20. நடிகனுக்கு இருக்க வேண்டிய முக்கியமான திறன்?

1) பாடுதல் 2) ஓடுதல் 3) அதிக கற்பனை 4) அழகை வளர்த்தல்

21. “புதிய தோர்வீடு” நாடகத்தின் ஆசிரியர்?

1) மகாகவி உருத்திரமூர்த்தி 2) குழந்தை மா.சண்முகலிங்கம்
3) வித்தியானந்தன் 4) மௌனகுரு

22. இயல் கலை யாது?

1) சிற்பம் கலை 2) இலக்கியம் 3) நடிப்பு கலை 4) வார்ப்புகலை

23. இசைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் நாடகம்

1) சமூக நாடகம் 2) நடன நாடகம் 3) இசை நாடகம் 4) கதகளி

24. நாடகத்தில் கட்புல கலையாக காணப்படுவது?

1) இசை 2) பாடல் 3) காட்சி விதானிப்பு 4) வசனம்

25. தமிழர்களின் பாரம்பரிய அரங்கு

1) வயல்வெளி 2) படச்சட்ட மேடை 3) ஆலய சூழல் 4) வட்டக்களரி

26. நாடகத்தின் குறை நிறைகளை ஆராய்பவர்?

1) நடிகன் 2) ஒப்பனையாளர் 3) விமர்சகர் 4) கவிஞர்

27. வானொலி நாடகத்தில் அரங்காக திகழ்வது?

1) வானொலி 2) கடைகள் 3) கேட்போர் மனம் 4) ஒலிபரப்பு கூடம்

28. இங்கிலாந்தில் மெழுகு சிலையாக வைக்கப்பட்ட முதல் இந்திய சினிமா நடிகன்?

1) ரஜனிகாந் 2) கமலகாசன் 3) சத்தியராஜ் 4) அஜித்குமார்

29. எழுத்துருவில் இருக்க வேண்டிய மிக முக்கிய அம்சம்

1) பாடல் 2) கவிதை 3) குறிப்பு 4) மோதுகை

30. மன்னனாக நடிப்பவனுக்கு இருக்க வேண்டிய முக்கிய உணர்வு?

1) காதல் 2) சோகம் 3) வீரம் 4) நட்பு

31. ஆபத்து உணர்வை வெளிக்காட்ட வழங்கப்படும் ஒளி?

1) கறுப்புநிறம் 2) பச்சைநிறம் 3) சிவப்புநிறம் 4) சீல நிறம்

32. ஓரங்க நாடகம் என்பது?

1) பலர் நடிப்பது 2) ஒரே ஒரு காட்சி

3) ஒரு அங்கத்தில் நாடகம் முடியும் 4) பார்வையாளர் சேர்ந்து நடித்தல்

33. அரிச்சந்திரா மயான காண்டம் நாடகம் எந்த வகை நாடகம்

1) கூத்து 2) இசை நாடகம் 3) குறியீட்டு நாடகம் 4) நகைச்சுவை நாடகம்

34. உலகமே ஒரு நாடக மேடை நாம் நடிகர் என்று கூறியவர்

1) வில்லியம் சேக்ஸ்பியர் 2) கமல்காசன்

3) பிறைற் 4) வைரமுத்து

35. கோல்களை தட்டி ஆடும் கூத்து?

1) வசந்தன் கூத்து 2) குதிரையாட்டம் 3) ஒயிலாட்டம் 4) கரகம்

36. "ஆகுசிவன் மைந்தன் அல்லோ" எனவரும் கூத்து

1) வடமோடி 2) தென்மோடி 3) காத்தவராஜன் 4) பாஸ்கு

37. முருகவழிபாட்டோடு தொடர்புடைய சடங்கு?

1) குறத்தி 2) சூரன்போர் 3) தீ மிதித்தல் 4) வாழைவெட்டுதல்

38. மக்கள் மத்தியில் ஸ்பெசல் நாடகம் என அழைக்கப்பட்ட நாடகம்

1) வீதி நாடகம் 2) இசை நாடகம் 3) சமூக நாடகம் 4) சமய நாடகம்

39. எழுத்துருவை பகுப்பாய்வு செய்ய பயன்படும் ஒத்திகை?

1) செயல் ஒத்திகை 2) ஒழுங்கிணைப்பு ஒத்திகை

3) வாசிப்பு ஒத்திகை 4) ஒருங்கிணைப்பு ஒத்திகை

40. படச்சட்ட மேடையில் நடிகனுக்கு முக்கியம் கொடுக்கும் பகுதி

1) CC 2) UL 3) UR 4) CL

(1X40=40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

01. அ) அரங்க விளையாட்டுக்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)
    ஆ) அரங்க விளையாட்டினால் நடிகனுக்கு ஏற்படும் நன்மைகளை பட்டியற்படுத்துக? (5 புள்ளிகள்)
    இ) ஏதாவது அரங்க விளையாட்டுக்களை குறிப்பிட்டு அதன் நியமங்களை விளக்குக. (7 புள்ளிகள்)

02. அ) நடிகனுக்கு வழங்கப்படும் பயிற்சிகள் எவை? (3 புள்ளிகள்)
    ஆ) பயிற்சிகள் நடிகனுக்கு வழங்கப்படுவதன் நோக்கம் யாவை? (5 புள்ளிகள்)
    இ) ஏதாவது ஒரு பயிற்சியினை குறிப்பிட்டு அப்பயிற்சியால் நாடக ஆற்றுகைக்கு எவ்வாறு உதவும் என்பதை சுருக்கமாக தருக? (7 புள்ளகள்)

03. அ) நாடகப்பண்புடைய சடங்கு 3 தருக? (3 புள்ளிகள்)
    ஆ) சடங்கில் காணப்படும் நாடக பண்புகளை குறிப்பிடுக? (5 புள்ளிகள்)
    இ) ஏதாவது ஒரு சடங்கினை குறிப்பிட்டு நாடக பண்புகளை விளக்குக? (7 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

04. அ) ஆற்றுகைக்கலைகள் 3 தருக? (3 புள்ளிகள்)
    ஆ) ஆற்றுகைகலைகளின் பண்புகளை விளக்குக. (5 புள்ளிகள்)
    இ) நடனம் எவ்வாறு ஆற்றுகைக்கலையில் உள்வாங்கப்படுகின்றது என்பதை விளக்குக? (7 புள்ளகள்)

05. அ) தயாரிப்பாளரின் பணிகள் 3 தருக? (3 புள்ளிகள்)
    ஆ) நெறியாளருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் யாவை? (5 புள்ளிகள்)
    இ) ஒரு நாடகத்திற்கு நெறியாளரின் பணி எத்தகையது என்பதை விளக்குக. (7 புள்ளிகள்)

06. சிறுகுறிப்பு

    எவையேனும் மூன்றினை விளக்குக?

    1) நாடக ஆசிரியர்
    2) வானொலி நாடகம்
    3) வட்டக்களரி
    4) புதிதளித்தல்
    5) ரட்டயகும்

(3X5=15 புள்ளிகள்)

(4)

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி Kalvi.lk

Whatsapp
075 287 1457